பக்கங்கள் 18 + 04

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## மைத்திரியின் புதிய கூட்டணி அயடுத்த வாரம்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான புதிய கூட்டணி அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும் என்று முன்னாள் 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மாசி 19 சனிக்கிழமை 02.03.2024 அதிர்வு 215



# சாந்தனின் பூதவுடலை கையளிப்பதில் இழுபறி

## தாமதிக்கும் நீர்கொழும்பு வைத்தியசாலை நிர்வாகம்

(ந.லோகதயாளன்)

இந்தியாவின் நயவஞ்சகத்தால் சாகடிக்கப்பட்ட ஈழத்தமிழன் சாந்தன் என்று அழைக்கப்படும் தில்லையம்பலம் சுதேந்திர ராஜாவின் பூதவுடல் இன்னமும் குடும்பத்தினரின் கையில் கிடைக்கவில்லை. 04

# யாழ். பல்கலையில் கறுப்புக் கொடிகள்





(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளா கம் எங்கும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன.

இந்தியாவின் நயவஞ்சகத்தால் உயிரிழந்த ஈழத் தமிழன் சாந்தன் என்று அழைக்கப்படும் தில்லையம்பலம் சுதேந்திரராஜாவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இந்தக் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டுள் ளன.



# மொட்டுவின் வேட்பாளர் நாமலா?

## இன்னமும் முடிவில்லை என்கிறார் காமினி லொக்குகே

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்குவது தொடர்பில் கட்சி இன்னும் எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை என்று அக்கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினரான காமினி லொக்குகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

“ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவது குறித்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி இன்னும் முடிவெடுக்கவில்லை. அதேபோல் நாமல் ராஜபக்ஷவை வேட்பாளராகப் போட்டியிட வைப்பது பற்றியும் தீர்மானம் எடுக்கப்படவில்லை. எனினும், நாமல் ராஜபக்ஷவின் பங்களிப்புடன் கட்சியைக் கட்டியெழுப்பும் பணி இடம்பெறுகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கட்சி மட்டத்தில் கலந்துரையாடல் இடம்பெற்று வருகின்றது. எனவே, உரிய நேரத்தில் முடிவெடுக்கப்படும்.

அதேவேளை, சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின்போது அவரைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.” – என்றார்.

# முட்டைக்கும் கட்டுப்பாட்டு விலை



சாதாரண விலையை விடவும் அதிக விலைக்கு முட்டை விற்கப்படுவதால் விரைவில் கட்டுப்பாட்டு விலை அமுல்படுத்தப்படும் என்று விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இந்த அதிகபட்ச சில்லறை விலை அடுத்த வாரம் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்குச் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

50 ரூபாவுக்கும் குறைவாக முட்டையை விற்பனை செய்ய முடியும் என்ற போதிலும் 60 ரூபா வரை சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றது என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.



# சமன் ரத்நாயக்கவுக்கு 14 வரை விளக்கமறியல்

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் ரத்நாயக்க எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர் மாளிகாகந்த நீதிமன்றத்தில் இன்று முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய மனித இம்யூனோகுளோபுலின் மருந்துக் கொள்வனவு தொடர்பில் அவர் நேற்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இதையடுத்து சமன் ரத்நாயக்கவிடம் 9 மணி நேரத்துக்கும் மேலாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அவர் கைது செய்யப்பட்டார்.



# கொழும்பு துறைமுகத்தில் ரஷ்யா போர்க்கப்பல்

ரஷ்ய கடற்படைக்கு சொந்தமான போர்க்கப்பல் ஒன்று உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இந்த கப்பலில் 529 பேர் நாட்டுக்கு வருகைத்தந்துள்ளனர் என இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

இரண்டு நாட்டு கடற்படைக்கும் இடையிலான அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கும் சில முக்கிய வேலைத் திட்டங்களில் அவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

கப்பலில் வருகைத்தந்தவர்கள் நாட்டின் பல முக்கிய இடங்களுக்கு செல்லவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கப்பல் தமது உத்தியோகப் பூர்வ விஜயத்தை நிறைவுசெய்து நாளை நாட்டை விட்டு வெளியேறவுள்ளது.




# விமான சேவைகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் தேசிய விமான சேவை நிறுவனமான எதிஹாட் இலங்கைக்கான விமான சேவைகளின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளது.

இதுவரை 10 விமானங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த நிலையில், அந்த எண்ணிக்கை நேற்று முதல் 13 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, வாராந்தம் புதன் கிழமையை தவிர்ந்த ஏனைய நாள்களில் இரண்டு தடவைகள் மேற்படி விமான சேவை இடம்பெறுமென எதிஹாட் விமான சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.

# சிவராத்திரி பூஜை தொடர்பில் நீதிமன்றை நாடும் வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலய நிர்வாகம்!

**(கே.வசந்தன்)**

வவுனியா வடக்கு, வெடுக்கு நாறிமலை ஆதிசிவன் ஆலய சிவராத் திரி பூஜை வழிபாடுகளின்போது மின் பிறப்பாக்கியைப் பயன்படுத்துவதற்கு ஆலய நிர்வாகத்தினர் சட்டத்தரணி ஊடாக வவுனியா நீதிமன்றத்திடம் அனுமதி கோரி மனுத் தாக்கல் செய்துள் ளனர்.

வவுனியா வடக்கு, ஒலுமடு வெடுக்கு நாறிமலை ஆதி சிவன் ஆலயத்தில் தொல்பொருள் சின்னங்களுக்குச் சேதம் ஏற்படுத்தாத வகையில் பூஜை வழிபாடுகளில் ஈடுபட வவுனியா நீதி மன்றம் அனுமதி வழங்கியிருந்தது.

அதனடிப்படையில் அங்கு பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில், கடந்த மாதம் 11 ஆம் திகதி கொழும்பில் உள்ள தேசிய மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பின் தலைவர் மெதகொட அபய திஸ்ஸ தேரர், சர்ச்சைக்குரிய முல்லைத் தீவு குருந்தூர்மலை விகாராதிபதி கல்கமுவ சாந்தபோதி தேரர் உள்ளிட்ட குழுவினர் இராணுவப் பாதுகாப்புடன் வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்துக்குச் சென்று பார்வையிட்டி ருந்தனர்.

எதிர்வரும் 8ஆம் திகதி சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலை யில் குருந்தூர்மலை விகாராதிபதி சமூக வலைத்தளத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி பௌத்த இடம் நெடுங் கேணியில் ஆக்கிரமிக்கப்படவுள்ளது என்றும், அதனைப் பாதுக்காக அணி திரள்வோம் என்றும் பதிவு செய்துள் ளார்.

ஆனால், ஆலய நிர்வாகத்தினர் வழமை போன்று சிவராத்திரி பூஜை வழிபாடுகளை மேற்கொள்ள ஏற்பாடு களைச் செய்துள்ளனர். அதேவேளை, வெளிச்சத்துக்காக மின்பிறப்பாக்கிப் பயன்படுத்துவதாக இருந்தால் நீதிமன்றில் அனுமதியைப் பெறுமாறு நெடுங்கேணி பொலிஸார் ஆலய நிர்வாகத்தினருக்கு அறிவுறுத்தியுள் ளனர்.

இதனடிப்படையில் ஆலய நிர் வாகத்தினர் மின்பிறப்பாக்கி பயன்படுத்த அனுமதி கோரி சட்டத்தரணி ஊடாக கடந்த வியாழக்கிழமை மன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர்.

இது தொடர்பில் ஆராய்ந்து, எதிர் வரும் திங்கட்கிழமை முடிவை அறி விப்பதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

# முல்லைத்தீவில் மோட்டார் சைக்கிள்கள் எதிர் எதிரே மோதியதில் ஒருவர் மரணம்

## இருவர் படுகாயம்

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் எதிர்எதிரேமோதிவிபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தக் கோர விபத்து முல்லைத்தீவு – அளம்பில் பகுதியில் இடம்பெற் றுள்ளது.

நேற்று இரவு 7 மணியளவில் இடம் பெற்ற மேற்படி விபத்தில் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் பயணித்த மூவர் படுகாயமடைந்த நிலையில் முல் லைத்தீவு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச் சைக்காக யாழ். போதனா வைத்திய



சாலைக்கு நேற்று இரவு அனுப்பி வைக் கப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த செம்மலையைச் சேர்ந்த 54 வய தான நாகராசா யோகராசா என்பவர் இன்று அதிகாலை மரணமடைந் தார்.

குமுழமுனை பகுதியிலிருந்து அளம் பில் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் செம்மலையிலிருந்து தண்ணிமுறிப்பு வயல் நோக்கிப் பய ணித்த மோட்டார் சைக்கிளும் அளம்பில் சந்திக்கு அருகே சென்று கொண்டி ருந்தபோது எதிர் எதிரே மோதி விபத்துக் குள்ளானது.

குமுழமுனை பகுதியிலிருந்து மோட்டார் சைக்கிளில் வந்து விபத்தை ஏற்படுத்தினார்கள் என்று கூறப்படு பவர்கள் மதுபோதையில் இருந்தனர் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ள நிலையில், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**சாந்தனின்...**

மீள் மரண விசாரணையைத் தொடர்ந்து மீள் பிரேத பரிசோதனையை நடத்துவதில் நீர்கொழும்பு வைத்தி யசாலை நிர்வாகம் தாமதம் காட்டுகின்றது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவிலிருந்து நேற்றுப் பகல் சாந்தனின் பூதவுடல் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது. கட்டுநாயக்க விமான நிலையத்தில் அவரின் பூதவு டலைப் பெறுவதில் தாமதம் நிலவியது. நீண்ட இழுபறியில் பின்னர் சாந்தனின் பூதவுடலை விமான நிலைய அதிகாரிகள் ஒப்படைத்தனர்.

அதன்பின்னர் மாலை வேளையி லேயே மீள் பிரேத பரிசோதனைக்காக நீர்கொழும்பு வைத்தியசாலைக்குப் பூதவுடல் கொண்டு செல்லப்பட்டது.

பூதவுடலை நேற்று இரவு பார்வையிட்ட நீதிவான், சாந்தனின் இரத்த உறவுகள் இருவர் முன்னிலையில் மீள் மரண விசாரணைகளை முன்னெடுத்த பின் னரே மீள் பிரேத பரிசோதனையை நடத்த வேண்டும் என்று உத்தரவிட்டார்.

அதற்கமைய இன்று மீள் மரண விசாரணையைத் தொடர்ந்து மீள் பிரேத பரிசோதனையை நடத்துவதில் நீர் கொழும்பு வைத்தியசாலை நிர்வாகம் தாமதம் காட்டி வருகின்றது.

எனினும், இன்று மாலை பூதவுடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று நீர்கொழும்பு வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

பூதவுடல் தமது கையில் கிடைத்த பின்னர்தான் இறுதிக்கிரியைகள் மற்றும் அஞ்சலி நிகழ்வுகள் தொடர்பில் அறிவித்தலை வழங்க முடியும் என்று சாந்தனின் குடும்பத்தினர் குறிப்பிட்டனர்.

---

**மைத்திரியின்...**

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் நேற்று கூடியபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து புதிய நிர் வாகிகள் நியமிக்கப்படுவார்கள் என்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துஸ்மந்த மித்ரபால கூறி னார்




# போதைப் பொருள் பாவனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஊர்வலம்

கிண்ணியாவில் போதைப் பொருள் பாவனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று காலை ஊர்வலம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த எதிர்ப்பு ஊர்வலம் கிண்ணியா பழைய வைத்தியசாலை சந்தியிலிருந்து ஆரம்பித்து ஓ ரீகன் பாலம் ஊடாக கிண்ணிய புகாரியடி சந்தி வரை இடம் பெற்றது .

நோவா விளையாட்டு கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த போதைப் பொருள் ஒழிப்பு ஊர்வலத்தில், தாய் சேய் நல வைத்திய அதிகாரி எம்.எச். சம். சமீம், திருகோணமலை, கிண்ணியா பிரதேச செயலாளர்கள் எம். எச்.எம் கனி, எம்.எம்.மஹ்தி, முன்னாள் கிண்ணியா நகர சபை உறுப்பினர் மற்றும் பதினாறுக்கும் மேற்பட்ட விளையாட்டு கழகங்களின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.







# முட்டையின் விலை மீண்டும் அதிகரிப்பு

சந்தையில் உள்ளூர் முட்டைகளின் விலை மீண்டும் அதிகரித்துள்ளது.

சில வர்த்த நிலையங்களில் ஒரு முட்டை 60 ரூபாய்க்கும் அதிக விலையில் விற்கப்படுவதாக நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த வாரங்களுக்கு முன்னர் சந்தையில் 50 ரூபாய் முதல் 55 ரூபாய் வரை விற்கப்பட்ட முட்டை, தற்போது 60 ரூபாய்க்கும் அதிக விலையில் விற்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஜனாதிபதிகளின் ஆட்டம்

ஜனாதிபதியின் நிறைவேற்றதிகாரம் அப்பதவியில் அச்சமயம் இருப்பவருக்கு நிரந்தரமானது அல்ல. அது பெரும்பாலும் பதவியில் இருக்கும் சமயம் அவருக்குப் புரிவதில்லை.

அந்தப் பதவியில் இருக்கும் போது போடும் ஆட்டங்களுக்குப் பின்னர் பதில் கூற வேண்டி வரும் - பொறுப்புக் கூறல் கடப்பாடு இலகுவில் தவிர்க்க கூடியதல்ல - என்பது பெரும்பாலும் பதவிச் சமயத்தில் அவர்களுக்குப் புரிவதில்லை.

எனினும் இப்போது அது பட்டறிவாக புரியக்கூடிய சூழல் ஏற்பட்டு வருவது ஜனநாயகத்தின் மீட்சிக்கான ஓர் வலிமையான போக்குத்தான்.

பதவிக்காலத்தில் தாம் இழைத்த அல்லது இழைக்காமல் விட்ட காரணத்தினால் ஏற்பட்ட தவறுகளுக்காக பின்னர் அதிகம் நெருக்கடிகளை எதிர்கொள்பவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனதான்.

அரைவாசியில் பதவியை விட்டு ஓடித் தப்பிய கோட்டாபய ராஜபக்ஷ அதனால் நெருக்கடியை எதிர்கொள்வதை ஓரளவு குறைத்துக் கொண்டுள்ளார் என்றே கூற வேண்டும்.

ஜனாதிபதிப் பதவியை விட்டு இறங்கிய பின்னர், சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்காக அதிகம் சிரமங்களை எதிர்கொள்பவராக - அல்லாடுபவராக - மைத்திரிபால சிறிசேனவே உள்ளார்.

ஜனாதிபதிப் பதவியில் இருக்கும்போதே தமது ஓய்வு காலத்துக்குத் தங்குவதற்கான அரச மாளிகை ஒன்றை ஒழுங்குபடுத்திக் கொண்டவர் மைத்திரிபால.

இப்போது அதை அவர் பயன்படுத்தத் தடை விதித்திருக்கின்றது உயர் நீதிமன்றம்.

2015 ஜனாதிபதி தேர்தலில் வென்றபோது தான் ஜனாதிபதி மாளிகையில் வசிக்கப் போவதில்லை, பதிலாக அதுவரை தான் தங்கி இருந்த பஜட் வீதி உத்தியோகபூர்வ இல்லத்திலேயே தொடர்ந்தும் தங்கி இருந்து பணியாற்ற போகின்றார் என அறிவித்தார் மைத்திரிபால சிறிசேன. புதிய ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லம் என்ற அடிப்படையில் அது பெரும் செலவில் மறுசீரமைக்கப்பட்டது. அருகில் இருந்த இன்னொரு அரச உத்தியோகபூர்வ இல்லமும் அதனுடன் இணைத்துப் பெருஞ்செலவில் ஒழுங்கமைக்கப்பட்டது.

நான்கு ஆண்டுகள் பதவிக்காலம் முடிந்து போகும் சமயத்தில், முன்னாள் ஜனாதிபதிக்கான உத்தியோகபூர்வ இல்லமாக அதைத் தொடர்ந்து தாம் பயன்படுத்துவதற்கான அமைச்சரவை தீர்மானத்தையும் அவர் எடுக்க வைத்தார். அந்தத் தீர்மானமே இப்போது உயர்நீதிமன்றத்தினால் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

தாமே ஜனாதிபதியாகவும், தீர்மானம் எடுக்கும் சபையின் தலைமை உறுப்பினராகவும் இருந்து கொண்டு, தமக்குச் சார்பாக அந்த தீர்மானத்தை எடுத்தமை இயற்கை நீதிக்கு பொருத்தமற்றது என உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இதே போல ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பதவியில் இருந்த போது ஓய்வு பெறும் ஜனாதிபதிக்கான அரச வசதியாக மாதிவெலவில் அரை ஏக்கர் காணியை வழங்கும் முடிவு எடுக்கப்பட்டு அது அவருக்கு வழங்கப்பட்டது.

ஆனால் அவர் பதவி இழந்த போது, அந்தக் காணி வழங்கலுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமையால் வேறு வழியின்றி அதைத் திரும்பக் கையளிக்க வேண்டியவரானார் சந்திரிகா.

ஒரே சமயத்தில் நான்கு முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் - சந்திரிகா, மஹிந்த, மைத்திரி, கோட்டாபய ஆகியோருக்கும் - முன்னாள் ஜனாதிபதியான ரணசிங்க பிரேமதாஸவின் மனைவிக்கும் உரிய ஓய்வு வசதிகள், சிறப்புரிமைகள், பிற ஒழுங்குகளை நாடு செய்ய வேண்டியுள்ளது.

அடுத்த செப்டம்பரில் ஜனாதிபதித் தேர்தலுடன் இந்தப் பட்டியலில் மேலும் ஒருவரின் எண்ணிக்கை அதிகரித்து விடுமோ என்னவோ..!

எது, எப்படி என்றாலும் அவர்கள் அதிகாரத்திலிருந்து இறங்கியதும், அவர்களின் ஆட்டம் அடங்கிவிடும் என்பதையும், கடந்த காலச் சம்பவங்களுக்கு தாங்கள் பொறுப்பு கூற வேண்டி இருக்கும் என்பதையும் அப்போது அவர்கள் புரிந்து கொள்வார்கள்.

அரசமைப்புச் சட்டம் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரங்களின்படி ஒரு வருடத்துக்கு முன்னர் நடைபெற்றிருக்க வேண்டிய உள்ளூராட்சித் தேர்தல்களை தமது அரசியல் சுய நோக்கங்களை அடைவதற்காக, குள்ளநரித் திட்டம் மூலம் தடுத்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

மக்களின் வாக்குரிமையை பறித்த இந்த அடாவடிக்காகத் தாம் அதிகாரத்திலிருந்து - பதவியிலிருந்து - இறங்கியதும் பொறுப்புக் கூற வேண்டியவராக இருப்பார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அப்போது இதைப் போன்று எத்தனை புதிய, புதிய நெருக்கடிகள் அவருக்கு காத்திருக்கின்றனவோ தெரியவில்லை.



# சமுர்த்தி திணைக்களத்தால் மன்னாரில் வீடுகள் கையளிப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

சமுர்த்தி திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் ரன்விமன வீட்டு திட்ட செயற்பாட்டின் மூலம் மன்னார் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பிரதேச சபைக்கும் மூன்று வீடுகள் வீதம் ஐந்து பிரதேச சபைகளுக்கு 15 வீடுகள் நிர்மாணிப்பதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

சம்பந்தப்பட்ட பயனாளிகளின் உதவிகளுடன் 15 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய மன்னார் பிரதேச சபைக்கு உட்பட்ட பட்டித்தோட்ட கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீடு, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் உரிய பயனாளியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில், சமுர்த்தி திணைக்கள பணிப்பாளர் ஐ. அலியார், மன்னார் பிரதேச செயலாளர், மன்னார் பிரதேச உதவி திட்டமிடல் பணிப்பாளர், மன்னார் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மனித - யானை மோதல் பற்றி மாணவர்களுக்கு விழிப்புணர்வு





(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஹெல்ப்ஶ்ரீலங்கா நிறுவனம், வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்துடன் இணைந்து நாட்டின் பல பகுதிகளிலும் அதிகரித்து வரும் மனித – யானை மோதல் மற்றும் அதனால் ஏற்படும் உள்ளூர் சமூகத்தின் மீதான தாக்கம் குறித்த செயலமர்வை நடத்தியுள்ளது.

இந்த செயலமர்வில் அம்பாந்தோட்ட சூரியவெவ, ரன்முதுவெவ மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 350 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். வனவிலங்கு பாதுகாப்பு திணைக்கள காப்புறுதித் துறை அதிகாரி சீ.பீ.என். சுரவீர தலைமையில், ஹெல்ப் ஶ்ரீலங்கா நிறுவனத்தின் கீழ் இந்த நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.



# இளவாலை ஹென்றியரசர் மாணவன் டுபாயில் உதைபந்தாட்டத்தில் சாதனை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

யாழ்ப்பாணம் – சேந்தாங்குளம் பகுதியைச் சேர்ந்த பாக்கியநாதன் டேவிட் டாலின்சன் என்ற 16 வயதுச் சிறுவன் டுபாய் – அபுதாபியில் இடம் பெற்ற உதைபந்தாட்ட போட்டியில் சாதனை நிகழ்த்தியுள்ளார்.

மேற்படி போட்டியில் கலந்து கொண்டு, கீழே பந்தை விழ விடாமல் ஆயிரம் தடவைகள் கட்டுப்படுத்தி முதலாவது இடத்தை பெற்று சாதனை படைத்துள்ளார்.

இந்த சிறுவன் இளவாலை ஹென்றியரசர் பாடசாலையில் கல்வி கற்று வருகின்றார்.





# இடைநிறுத்தப்பட்ட ஆலங்குடா பாதை புனரமைப்பு பணிகள் மீண்டும் ஆரம்பம்

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஆலங்குடா பாதையின் புனரமைப்பு வேலைத்திட்டத்தை மீண்டும் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் இன்று ஆரம்பித்து வைத்துள்ளார்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த வேலைத்திட்டங்களின் ஒரு தொகுதியான ஆலங்குடா சந்தியிலிருந்து கடற்கரை வரையிலான பாதையின் வேலைத் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் அருள்தாசன் மற்றும் அவரது காரியாலய அதிகாரிகள், நுரைச்சோலை வட்டார இணைப்பாளர் என்.எம். ஹஸீப், ஆலங்குடா இணைப்பாளர் பஸ்லி, ஏத்தாலை இணைப்பாளர் அஸ்வர் அலி, கல்பிட்டி இணைப்பாளர் யூ.எம். ஜின்னா, ஆலங்குடா பிரதேச பிரபல வர்த்தகர் ரியாஸ் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வு ஆலங்குடா இணைப்பாளர் பஸ்லி தலைமையில், கிராம பள்ளிவாசல் தலைமைகள், பாடசாலை நிர்வாகம், கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தயோகத்தர், சமூர்தி உத்தியோகத்தர் மற்றும் கிராம பிரமுகர்களால் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.







# காத்தான்குடி மில்லத் பாடசாலையின் கணினி அறை திறப்பு விழா நிகழ்வு!

(பழுவூரான்)

கொமர்ஷல் வங்கியின் சி.எஸ்.ஆர். அறக்கட்டளை திட்டத்தின் கீழ் காத்தான்குடி மில்லத் பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு கணினிகள் மற்றும் தளபாடங்கள் கையளிக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

பாடசாலையின் அதிபர் திருமதி ஜே.யூ.எம் ஜெஸீமா முஸம்மில்லின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக கொமர்ஷல்வங்கியின் கிழக்குப் பிராந்திய முகாமையாளர் ராஜகுலசூரியர் கஜ ரூபனும்,

கௌரவ அதிதிகளாக காத்தான்குடி கொமர்ஷல் வங்கிக் கிளையின் முகாமையாளர் லூயிஸ் கரோல்ட் ஜித்தேந்திரன், அக்கரைப்பற்று கொமர்ஷல் வங்கி கிளையின் முகாமையாளர் ஐ.எம் பாயிஸ், காத்தான்குடி கொமர்ஷல் வங்கி கிளையின் உதவி முகாமையாளர் எம்.என்.எம் ரிப்கி ஆகியோரும், விசேட அதிதியாக காத்தான்குடி பிரதேச கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் ஏ.ஜி. எம் ஹக்கீமும் கலந்து கொண்டனர்.

இந்த விழாவில் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழுவின் முன்னாள் செயலாளர் ஷாதுலி ஹாஜியார், பழைய மாணவர் சங்க செயலாளர் திருமதி ஷகீலா அப்துர்ரஹ்மான் மற்றும் பொருளாளர் அஜ்மீர், இத்திட்டத்தின் இணைப்பாளரும் பழைய மாணவருமான எம்.எம். பாமிக், பாடசாலையின் பிரதி அதிபர், உதவி அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது 10 கணினிகள், அதற்கான தளபாடங்கள் என்பன கொமர்ஷல் வங்கியின் அதிகாரிகளினால் பாடசாலையின் அதிபர் திருமதி ஜே.யு.எம் ஜெஸீமா முஸம்மில்லிடம் வழங்கி வைக்கப்பட்டன.















# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் 12 ஆவது சர்வதேச ஆய்வரங்கு

(நூருல் /ஹுதா உமர்)

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் "Digital Transformation for a Sustainable Future" எனும் தொனிப்பொருளில் 12 ஆவது சர்வதேச ஆய்வரங்குக்கு நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வு, IntSym 2024 இணைப்பாளர் பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா தலைமையில், பல்கலைக்கழக பிரதான கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

இரண்டு கட்டங்களாக இடம்பெற்ற நிகழ்வுகளில், ஆரம்ப நிகழ்வாக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் அங்கு நிறுவப்பட்டிருந்த வர்த்தக காட்சிக் கூடங்களை திறந்து வைத்தார்.

IntSym 2024 இணைப்பாளர் பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா அவர்களது தலைமையுரையுடன் ஆரம்பமான நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கலந்து கொண்ட உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் உரையாற்றினார்.



நிகழ்வின்போது IntSym 2024 பிரதம ஆசிரியர் கலாநிதி எம்.பி.எம். இர்ஷாட், IntSym 2024 ஆசிரியர் குழாம் மற்றும் ஆய்வரங்குக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் அவற்றை தெரிவு செய்த வழிமுறைகள் தொடர்பான கருத்துக்களை வெளியிட்டார். பின்னர் IntSym 2024 Abstracts Book வெளியிட்டு வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இரண்டாவது அமர்வில் IntSym 2024 இற்கு ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்திருந்தோர் தங்களது கட்டுரைகளை முன்னிலைப்படுத்தி விவாதித்தனர். இந்த 12 ஆவது சர்வதேச ஆய்வரங்கின்போது 200 ஆராச்சி கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டன.

இரண்டாவது அமர்வுகள் கலை கலாச்சார பீடம், வர்த்தக முகாமைத்துவ பீடம், பொறியியல் பீடம், இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபுமொழி பீடம், தொழில்நுட்பவியல் பீடம் மற்றும் அஷ்ரப் ஞாபகார்த்த பிரதான நூலகம் போன்றவற்றில் இடம்பெற்றன.

நிகழ்வுகளில் பீடாதிபதிகள், பேராசிரியர்கள், பதில் பதிவாளர் எம்.ஐ.எம். நௌபர், பதில் நிதியாளர் சி.எம். வன்னியாராச்சி, நூலகர் எம்.எம். றிபாஉடீன், சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட விரிவுரையாளர்கள், உள்ளூர் தொழில் முனைவோர், நிறைவேற்று உத்தியோகத்தர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் என பலரும் பங்குகொண்டிருந்தனர்.











# சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற 2 டிப்பர் வாகனங்கள் தடுத்து வைப்பு

(த.சுபேசன்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடி–கோப்பாய் வீதியில் கடந்த பிற்பகல் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச் சென்ற இரு டிப்பர் வாகனங்களுடன், அதன் சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உரிய அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற போதே மேற்படி கைது நடவடிக்கையை சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான பொலிஸ் குழுவினர் முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது, கைதான சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.





# ஸாவியா மகளிர் வித்தியாலயத்தின் 2023 ஆம் ஆண்டு பரிசளிப்பு விழா



(எம்.எம்.றம்ஸீன்)

காத்தான்குடி ஸாவியா மகளிர் வித்தியாலயத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான பரிசளிப்பு விழா பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது

இந்த நிகழ்வில் 2022 ஆம் ஆண்டில் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்களும், ஸாவியா மகளிர் வித்தியாலயத்தில் க. பொ.த. சாதாரண தரம் வரை கல்வி கற்று வேறு பாடசாலைகளில் உயர்தரத்தை தொடர்ந்து பல்கலைகழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும், 2023 ஆம் ஆண்டில் மூன்றாம் தவணை பரீட்சையில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர்களும், புலமைப் பரிசில் பரீட்சையில் 2022, 2023 ஆகிய ஆண்டுகளில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதன் போது தேசிய மட்ட சமூக விஞ்ஞான போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட ஹம்தா எனும் மாணவியும் கௌரவிக்கப்பட்டார். மேலும் பல போட்டிகளில் கலந்து வெற்றி பெற்று மாணவர்களும், சேவை நலன் பாராட்டி ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை அதிபர் முஜீப் தலைமையில் நடைபெற்றஇந்த நிகழ்வில், பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா கலந்து கொண்டார்.

அத்துடன், காத்தான்குடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஹக்கீம், காத்தான்குடி நகர சபை முன்னாள் தவிசாளர் அஸ்பர் உட்பட பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர் .



# இஸ்லாமாபாத் மகா வித்தியாலயத்தில் பெற்றோர், ஆசிரியர்கள் ஒன்று கூடல்

(எம்.எம்.றம்ஸீன்)

கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலய பாடசாலையில் தரம் 1 தொடக்கம் 13 வரை கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்களுக்கான ஒன்று கூடல் பாடசாலை அதிபர் ஏ.ஜீ.எம்.றிசாத் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இந்தக் கூட்டத்தில் நடந்து முடிந்த மூன்றாம் தவணைப் பரீட்சையின் பெறுபேற்று அறிக்கைகள் வழங்கப்பட்டதுடன், முதல் மூன்று நிலைகளைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

மேலும் 2024 ஆம் கல்வி ஆண்டில் மாணவர்களுடைய கல்வி அடைவு மட்டத்தினை எவ்வாறு அதிகரிக்கச் செய்வது என்பது தொடர்பாகவும், அவர்களுடைய வருகை மற்றும் ஒழுக்க விழுமியங்கள் தொடர்பாகவும் பெற் றோர்களுடன் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கலந்துரையாடல் கூட்டத்தில் பாடசாலையின் பி.எஸ்.ஐ. இணைப்பாளர் .ஜெஸ்மி எம் மூஸா, பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உறுப்பினர் அபூபக்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன், பாடசாலையின் பிரதி அதிபர், பகுதித் தலைவர்கள் மற்றும் வகுப்பாசிரியர்களும் கலந்துகொண்டு தங்களது எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக எடுத்துரைத்தனர்.



# இலங்கையில் தொடரும் கடும் வெப்பம்; ‘எச்சரிக்கை நிலை’ வரை அதிகரிக்கும்

வடமேல், மேல், தெற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும், மன்னார் மாவட்டத்திலும் மனித உடலில் உணரப்படும் வெப்பநிலை ‘எச்சரிக்கை நிலை’ வரை அதிகரிக்கும் என்று எச்சரித்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள வெப்ப சுட்டெண் ஆலோசனை அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பணியிடங்களில் பணிபுரிபவர்கள் அதிக நீரை அருந்துதல், அடிக்கடி நிழலில் ஓய்வெடுத்தல், நீரேற்றத்துடன் இருத்தல் முக்கியம் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




அத்துடன், முதியோர்கள் மற்றும் சிறுவர்களை அவதானத்துடன் பாதுகாத்து கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடுமையான வெளிப்புற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துமாறும் நீரேற்றமாக இருக்க முன்னுரிமை கொடுக்குமாறும், வெள்ளை அல்லது வெளிர் நிறங்களில் இலகுரக ஆடைகளை அணியுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.




# நிந்தவூரில் சிறப்பாக இடம்பெற்ற உலக ‘புவி நாள்’ கொண்டாட்டம்

**(வி.ரி.சகாதேவராஜா)**

கல்முனை நகர லயன்ஸ் கழகம் மற்றும் நிந்தவூர் சுப்ரீம் லயன்ஸ் கழகம் ஆகியன இணைந்து 2024 ஆம் ஆண்டு புவி தினத்தை நிந்தவூரில் கோலாகலமாக கொண்டாடின .

இந்த நிகழ்வின் போது கடற்கரையை சுத்தம் செய்தல், டெங்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரம் விநியோகம், புற்றுநோய் விழிப்புணர்வு துண்டு பிரசுரம் விநியோகம், பனை விதைகள் நடுதல், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக வளாகத்தில் மரம் நடுதல், பங்கேற்பாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு 100 பலா செடிகள் விநியோகம் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மேலும், டெங்கு நோயை எதிர்த்துப் போராடுவதற்கும், பொலித்தீன் பெருக்கத்தைத் தடுப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

கல்முனை லயன்ஸ் கழகத் தலைவர் மதுரநாயகம் சுதர்சன் மற்றும் நிந்தவூர் சுப்ரீம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் அரூப் அர்ஷத் ஆகியோரின் தலைமையில், சுற்றுச்சூழல் மற்றும் பொது சுகாதார பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் இந்த கூட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்வில், ஸ்ரீலங்கா லயன்ஸின் சுற்றாடல் தவிசாளர் முன்னாள் மாவட்ட ஆளுநர் ரொஷான் காஞ்சன யாப்பா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

அம்பாறை மாவட்ட சமூக சேவை நிறுவனங்களின் கூட்டமைப்பு, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம், நிந்தவூர் பிரதேச சபை, பிரதேச செயலகம், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மினா விளையாட்டுக் கழகம், மதீன விளையாட்டுக் கழகம், ஸ்ரீலங்கா ஸ்மார்ட் யூத் விளையாட்டுக் கழகம், பிரதேச சம்மேளன விளையாட்டுக் கழகம், நிந்தவூர் அல்அஸ்ரக் அல்மஸ்ஹர் மற்றும் கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரி ஆகிய வற்றின் சுற்றாடல் கழகங்கள் இந்த நிகழ்வுக்கு தமது ஆதரவை வழங்கின.

அத்துடன், சம்மாந்துறை கோல்டன் சிட்டியின் லயன்ஸ் கழகம் மற்றும் சாய்ந்தமருது லயன்ஸ் கழக உறுப்பினர்களும் இந்த முயற்சிக்கு தமது ஆதரவை வழங்கினர்.















# சாதனை மாணவன் ஸயானுக்கு இறக்காமத்தில் சிறந்த வரவேற்பு

(வி.ரி.சகாதேவராஜா)

தேசிய ரீதியில் சாதனை படைத்த மாணவன் ஸயானுக்கு இறக்காமத்தில் நேற்று சிறந்த வரவேற்பு வழங்கப்பட்டுள்ளது.

அவருக்கு ஊர் பூராக பொன்னாடை போர்த்தி பாராட்டுக்கள் குவிந்தன.

சம்மாந்துறை வலயத்திலுள்ள இறக்காமம் அல்–அஷ்றப் மத்திய கல்லூரியில் தரம் 7 இல் கல்வி கற்கும் மாணவன் எம்.கே. யூசுப் ஸயான் கடந்த 2023 ஆம்ஆண்டுநடைபெற்ற அகில இலங்கை தேசிய மட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளார்.

இந்த நிலையில், இறக்காமம் முழுவதும் மாணவன் ஸயான் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். அவருக்கு கோலாகலமாக பாராட்டு நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இறக்காமம் பிரதேச செயலகம், பிரதேச சபை, கோட்ட பாடசாலைகள் மற்றும் தனியார் நிறுவனங்களால் அவர் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில், வலயம் சார்பில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எம்.வை. அறபாத், எ.எல்.எம்.மஜீத் மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எல்.எம். நிஷார், ஆசிரிய ஆலோசகர் எஸ்.எல்.ஏ.முனாவ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



















# ‘துளிர்விடு’ சஞ்சிகை வெளியீடு

(பழுவூரான்)

மட்டக்களப்பு பொது நூலகமும், மட்டக்களப்பு பண்பாட்டலுவலகமும் இணைந்து நடாத்திய ‘துளிர்விடு’ சஞ்சிகை வெளியீட்டு விழா மட்டக்களப்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட கலாசார இணைப்பாளர் த. மலர்ச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அதிதிகளாக மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் விநாயகமூர்த்தி றஞ்சிதமூர்த்தி, பேராசிரியர்களான சி.மௌனகுரு மற்றும் சி.சந்திரசேகரம், மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது தமிழர்களின் பாரம் பரியத்தை வெளிக் கொணரும் வகை யில் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம் பமான இந்நிகழ்வில், ‘துளிர்விடு’ சஞ்சிகை வெளியிடப்பட்டது.

இந்தச் சஞ்சிகையின் முதல் பிர திகளை சஞ்சிகையின் ஆசிரியர்களான மாவட்ட கலாசார இணைப்பாளர் த. மலர்ச்செல்வன் மற்றும் பொதுநூலகர் த.சிவராணி ஆகியோர் இணைந்து மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் விநாயகமூர்த்தி றஞ்சிதமூர்த்தி மற்றும் மட்டக்களப்பு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.பிரகாஷ் ஆகியோருக்கு வழங்கினர்.

இதனைத் தொடர்ந்து நிகழ்வுக்கு வருகை தந்த எழுத்தாளர்கள், கவி ஞர்கள், புத்துஜீவிகள் மற்றும் ஊடக வியலாளர்களுக்கு சஞ்சிகையின் பிரதி கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ஈழத்துச் சிற்றிதழ் போக்கில் துளிர்விடு சஞ்சிகை’ எனும் தலைப்பில் ஆசிரியர் ஜிப்ரி ஹாசன் அறிமுக உரை நிகழ்த்தியிருந் தார்.










# சாந்தனின் உயிரிழப்பு விவகாரம் தொடர்பாக திருச்சி முகாமில் சக அகதிகள் உண்ணாவிரதம்



முன்னாள் பிரதமர் ராஜிவ்காந்தி கொலை வழக்கிலிருந்து விடுதலையான சாந்தனின் உயிரிழப்பு விவகாரம் தொடர்பாக திருச்சி அகதிகள் சிறப்பு முகாமில் சக அகதிகள் உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டுள்ளனர்.

மேலும் ரொபர்ட் பயஸ் உலகத் தமிழர்களுக்கு எழுதிய உருக்கமான கடிதம் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

முன்னாள் பிரதமர் ராஜிவ்காந்தி கொலை வழக்கில் தொடர்புடைய, இலங்கைத் தமிழர் சாந்தன் உடல் நலம் பாதிக்கப்பட்டு சென்னை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற நிலையில் கடந்த புதன்கிழமை உயிரிழந்தார்.

திருச்சி அகதிகள் சிறப்பு முகாமிலிருந்த அவருக்கு கல்லீரல் செயலிழப்பு காரணமாக திருச்சி அரசு மருத்துமனையில் சிகிச்சை பெற்று மேல் சிகிச்சைக்காக சென்னையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் இறந்தார்.

ஏற்கெனவே, உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்த அவர் சிறைத் தண்டனைக்குப் பின்னரும் அகதிகள் சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டதாலும், இலங்கைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்காத காரணத்தினாலும் உயிரிழந்தார் எனக்கூறி சக அகதிகளான முஜி புர்ரகுமான், சுகந்தன் ஆகியோர் கடந்த புதன்கிழமை முதல் உண்ணா விரதம் மேற்கொண்டனர்.

வருவாய்த்துறையினர் மேற்கொண்ட பேச்சு வார்த்தையின் பின்னர் சுகந்தன் போராட்டத்தை கைவிட்டார். முஜிபுர்ரகுமான் தொடர்ந்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகிறார்.

இந்த நிலையில், ராஜிவ்காந்தி கொலை வழக்கிலிருந்த விடுதலையான ஏனையோரும் திருச்சி அகதிகள் முகாமில் உள்ளனர்.


இவர்களில் ரொபர்ட் பயஸ் உலகத் தமிழர்களுக்காக எழுதிய கடிதம் சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

அந்த கடிதத்தில் அவர் குறிப்பிடுகையில்,

“33 ஆண்டுகள் சிறை வாசத்துக்குப் பின்னர் விடுவிக்கப்பட்ட நாங்கள், விடுவிப்பு என்ற பெயரில் சிறை மாற்றம் செய்யப்பட்டதாகவே கருதுகிறோம். எங்களை குடும்பத்தாருடன் செல்ல அனுமதிக்கவில்லை. சாந்தனை அனுப்பியிருந்தால் அவர் சில காலமாவது பெற்றோருடன் வசித்திருப்பார்.

அதுபோலவே முருகன் மற்றும் ஜெயக்குமார் உள்ளிட்ட எங்கள் நிலையும் உள்ளது. குடும்பத்தை பிரிந்துள்ள நாங்கள் எங்களது குடும்பத்தினருடன் சேர்ந்து வாழ முடியவில்லை. எங்களுக்கு விடுவிப்பு எப்போது என்பது புரியவில்லை. இனியாவது அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து எங்களை விடுவிக்க வேண்டும்.” – என்று குறிப்பிட்டுள்ளார்.

# தீவிர அரசியலில் இருந்து விலகுகின்றேன்; பா.ஜ.கவின் எம்.பி. கவுதம் கம்பீர் அறிவிப்பு



தீவிர அரசியலில் இருந்து விலகுகின்றேன் என்று பா.ஜ.கவின் எம்.பியும் கிரிக்கெட் வீரருமான கவுதம் கம்பீர் அறிவித்துள்ளார்.

அத்துடன், அரசியல் தொடர்பான பணிகளில் இருந்து தன்னை விடுவிக்குமாறு பா.ஜ.க. தேசியத் தலைவர் ஜே.பி.நட்டாவிடம் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கிழக்கு டில்லி தொகுதியின் எம்.பி.யாக உள்ளார் முன்னாள் கிரிக்கெட் வீரர் கவுதம் கம்பீர். இவர், 2019 மார்ச் மாதம் பா.ஜ.கவில் இணைந்தார். பா.ஜ.க. சார்பில் போட்டியிட்டு வென்றார். அதன்பின் டில்லியில் பா.ஜ.கவின் முக்கிய முகமாக மாறினார். தொடர்ந்து 2019 மக்களவைத் தேர்தலில் கிழக்கு டில்லி தொகுதியில் 6 லட்சத்து 95 ஆயிரத்து 109 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று மக்களவை எம்.பியானார்.

எதிர்வரும் 2024 தேர்தலில் கம்பீருக்கு ஆசனம் வழங்கப்படுவது குறித்து பல்வேறு சந்தேகங்கள் எழுப்பப்பட்டு வந்தன. நேற்றுமுன்தினம் 2024 மக்களவைத் தேர்தலுக்கான வேட்பாளர்கள் தொடர்பாக மோடி உள்ளிட்ட பா.ஜ.க. தலைவர்கள் இரவு முழுக்க ஆலோசனை நடத்தினர்.

இந்த ஆலோசனையால் வேட்பாளர்களின் முதல் பட்டியலை பா.ஜ.க. விரைவில் வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு மத்தியில் தான் அரசியலில் இருந்து விலகும் முடிவை கம்பீர் எடுத்துள்ளார்.

இதுதொடர்பாக எக்ஸ் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

“எதிர்வரும் கிரிக்கெட் தொடர்களில் கவனம் செலுத்தும் வகையில், எனது அரசியல் கடமைகளில் இருந்து என்னை விடுவிக்குமாறு ஜே.பி. நட்டாவிடம் கேட்டுக் கொண்டேன். மக்களுக்குச் சேவை செய்ய எனக்கு வாய்ப்பளித்த பிரதமர் நரேந்திர மோடிக்கு மனப்பூர்வமாக நன்றி தெரிவிக்கிறேன். ஜெய். ஹிந்த்” என்று தெரிவித்துள்ளார்.




# ஜார்க்கண்ட், மேற்கு வங்கத்தில் 42,900 கோடி ரூபா திட்டங்கள்

## பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்

ஜார்க்கண்ட் மாநிலத்தில் உர ஆலை, மின் உற்பத்தி நிலையம், ரயில் பாதை உட்பட 35,700 கோடி ரூபா மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களையும், மேற்கு வங்க மாநிலத்தில் துறைமுகம், எண்ணெய் குழாய், எல்.பி.ஜி. காஸ் விநியோகம், கழிவுநீர் மேலாண்மை உட்பட 7,200 கோடி ரூபா மதிப்பிலான திட்டங்களையும் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.

இந்த வளர்ச்சித் திட்டங்கள் குறித்து நேற்று ஜார்க்கண்ட் மாநிலத்தில் பொது மக்கள் மத்தியில் பிரதமர் மோடி பேசுகையில்,

"ஜார்க்கண்ட் மக்களுக்கு 35,700 கோடி ரூபா மதிப்பிலான வளர்ச்சி திட்டங்கள் பரிசாக அளிக்கப்பட்டுள்ளது. சிந்திரியில் உர ஆலை அமைக்கப்படும் என்று உத்தரவாதம் கொடுத்திருந்தேன். இன்று அது நிறைவேறியுள்ளது. ஆயிரக்கணக்கானோருக்கு இந்த ஆலை மூலம் வேலை கிடைக்கும். 2014 இல் 225 லட்சம் தொன்னாக இருந்த உர உற்பத்தி தற்போது 310 லட்சம் தொன்னாக மாறியுள்ளது. இந்த ஆலை மூலம் நாடு உரத் தயாரிப்பில் சுயசார்பை அடையும்.

ஜார்க்கண்ட் மாநிலத்தை மேம்படுத்த கடந்த 10 ஆண்டுகளில் மத்திய அரசு பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளது. இம்மாநிலத்தின் பழங்குடிமக்கள், ஏழைகள், இளைஞர்கள், பெண்கள் ஆகியோரை மேம்படுத்துவது மத்திய அரசின் முதன்மை இலக்காக உள்ளது" - என்றார்.

# சீமான் கட்சிக்கு கரும்பு விவசாயி சின்னம் மறுப்பு: டில்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை



மக்களவைத் தேர்தலில் தங்களுக்கு கரும்பு விவசாயி சின்னம் வழங்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக்கோரி நாம் தமிழர் கட்சி சார்பில் டில்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு இருந்தது. இந்த வழக்கு விசாரணை டெல்லி உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி மன்மோகன் தலைமையிலான அமர்வில் நேற்று நடைபெற்றது.

அப்போது சீமான் தரப்பில், பல ஆண்டுகளாக கரும்பு விவசாயி சின்னத்தில் தான் போட்டியிட்டு வருகிறோம். எனவே இந்த முறையும் இந்த சின்னத்தை எங்களுக்கே ஒதுக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என வாதிடப்பட்டது.

அப்போது குறுக்கிட்ட தலைமை நீதிபதி மன்மோகன், " பொது சின்னம் பட்டியலில் உள்ள அந்த சின்னத்தை முதலில் கோருபவர்களுக்கு முன்னுரிமை அளித்து தேர்தல் ஆணையம் ஒதுக்கியுள்ளது. அதன்படி அந்த சின்னம் தற்போது வேறு ஒரு கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் என்ன தவறு இருக்கிறது.

குறிப்பிட்ட கட்சிக்காக ஆணையத்தின் நடைமுறையை மாற்ற முடியாது. மேலும் நாம் தமிழர் கட்சி இன்னும் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்படாத கட்சி. அப்படியிருக்கும்போது எப்படி ஒரு குறிப்பிட்ட சின்னத்தை உரிமை கோர முடியும்."- என்றார்.

மேலும் தலைமை தேர்தல் ஆணையம் தரப்பிலும் விளக்கமளிக்கப்பட்டது. அப்போது நாம் தமிழர் கட்சி சார்பில், " பொது சின்னம் கோருவதற்கான கால அவகாசம் இன்னும் உள்ளது. சின்னத்தை எங்களுக்கு ஒதுக்க மறுப்பது ஏற்புடையதல்ல" என வாதிடப்பட்டது.

அப்போது குறுக்கிட்ட தலைமை நீதிபதி மன்மோகன், "அந்த சின்னம் உங்களுக்கு கிடைக்க அதிர்ஷ்டமில்லை போல, எனவே அதை இந்த முறை மாற்றி விடுங்களேன்" என நகைச்சுவையாக கருத்து தெரிவித்தார். அதன்பிறகு இதுதொடர்பாக உத்தரவு பின்னர் பிறப்பிக்கப்படும் எனக்கூறினார்.



# தாய்வானின் வான் பரப்பில் 19 சீனப் போர் விமானங்கள்

தாய்வானுக்கு அருகில் 19 சீன இராணுவப் போர் விமானங்கள் மற்றும் 7 கடற்படைக் கப்பல்கள் ரோந்து சென்றுள்ளன என அந்த நாட்டின் தேசிய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சீனாவின் நடவடிக்கைக்கு பின்னர், தாய்வான் இராணுவம், விமானப்படை விமானங்கள், கடற்படை கப்பல்கள் மற்றும் வான் பாதுகாப்பு ஏவுகணை அமைப்புகளை நிலைநிறுத்தியுள்ளது.

இதேவேளை, 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல், தாய்வான் அருகில் சீனா தொடர்ந்து தனது இராணுவ ஊடுருவல்களை மேற்கொண்டு வருகிறது.

கடந்த பெப்ரவரி மாதம் சீனாவின் போர் விமானங்கள் 253 முறையும் கடற்படை கப்பல்கள் 150 முறையும் தாய்வானின் வான்பரப்பு மற்றும் கடற்பரப்பில் ரோந்து சென்றன என தாய்வான் கூறியுள்ளது.

தாய்வானில் ஊடுருவுவதை மறைக்க சீனா இராணுவப் பயிற்சிகளை அதிகரிக்கக்கூடும் என அமெரிக்காவின் இந்தோ-பசிபிக் கடற்படை தளபதி அட்மிரல் சாமுவேல் பாப்பரோ தெரிவித்துள்ளார்.

மேலும் சீனாவுக்கு அருகில் உள்ள தீவு நாடான தாய்வான், தன்னை ஒரு சுதந்திர நாடு என கூறி வருகின்ற நிலையில் தாய்வான் தனக்கு சொந்தமானது என சீனா தெரிவித்து வருகின்றது.

தாய்வானின் மிகப்பெரிய ஆதரவாளராகவும் நட்பு நாடாகவும் அமெரிக்கா இருந்து வருகிறது.

குறிப்பாக இந்த இருநாடுகளும் உத்தியோகபூர்வ இராஜதந்திர உறவுகளைக் கொண்டிருக்கவில்லை என்றாலும், தாய்வானுக்கு தேவையான ஆயுதங்கள் அமெரிக்காவால் வழங்கப்படுகின்றன.



# கலிபோர்னியாவில் பனிப்புயல் அபாயம்!

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள சியரா நெவாடா பகுதியில் பெரும் பனிப்புயல் உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக யோசெமிட்டி தேசிய பூங்கா உள்ளிட்ட சில பகுதிகளை மூட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அந்தப் பகுதிகளில் 10 அடி வரை பனிப்பொழிவு ஏற்படும் அபாயம் இருப்பதால், நெடுஞ்சாலை உள்ளிட்ட சாலைகள் மூடப்பட்டுள்ளன.

மேலும் நெவாடா மலைப்பகுதியில் காற்றின் வேகம் மணிக்கு 225 கிலோமீட்டர் வரை உயரக்கூடும் என அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

# அலெக்ஸி நவல்னியின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது

ரஷ்யாவின் எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவல்னியின் உடல் மொஸ்கோவில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் கடுமையான விமர்சகரான நவல்னி, தனது 47 ஆவது வயதில் அவர் சிறைவைக்கப்பட்டிருந்த தண்டனைக் குடியிருப்பில் கடந்த பெப்ரவரி 10 ஆம் திகதியன்று உயிரிழந்துள்ளார்.

இதனை தொடர்ந்து, அவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என அவரது ஆதரவாளர்களிடமிருந்து குற்றச்சாட்டுக்கள் எழுப்பியிருந்த நிலையில் ரஷ்ய அரசுக்கு அதில் எந்த தொடர்பும் இல்லை என மறுத்துள்ளது.

இந்த நிலையில், நவல்னியின் இறுதி நிகழ்வின்போது, பல நாட்டு தூதுவர்கள் பிரசன்னமாகியிருந்துள்ளனர்.

இதன்போது, நவல்னியின் மரணத்திற்கு காரணமான அதிகாரிகளை மன்னிக்க மாட்டோம் என ஆயிரக்கணக்கான ரஷ்யர்கள் கோசமிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



பக்கங்கள் - 4

# கனடா முரசு

சனிக்கிழமை 02/03/2024

## செய்தியாளர்களுக்கு உதவியளிக்கும் திட்டம்

**ஒட்டாவா, மார்ச் 02**

நாடு முழுவதும் 400 உள்ளூர் (செய்தி) அறிக்கைப்படுத்தல் பதவி நிலைகளுக்கு நிதியளிக்கும் நிகழ்ச்சியை

C2



# சாந்தன் வணக்க நிகழ்வு

# நாளை ஸ்கார்பரோவில்!

## இவன்ட் சென்டரில் நடைபெறுகின்றது

ஒன்ராரியோ, மார்ச் 02

**இந்தியாவில் உயிரிழந்த சாந்தன் என அழைக்கப்படும் தில்லையம்பலம் சுதேந்திர ராஜாவிற்கு மலர் வணக்கம் செலுத்தும் நிகழ்வு நாளை (மார்ச் 3) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஸ்கார்பரோ இவன்ட் சென்டரில் நடைபெறவுள்ளது.**

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் கைதாகி 33 வருடங்கள் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட சாந்தன், பல போராட்டங்களின் பின்னர் தாயகம் திரும்ப இருந்த நிலையில், கடந்த புதன்கிழமை காலை சென்னை ராஜீவ் காந்தி அரச மருத்துவமனையில் மார டைப்பால் உயிரிழந்தார்.

இதனையொட்டி சாந்தனின் நினைவு வணக்க நிகழ்வு கனேடியத் தமிழர்களால் ஒழுங்கு செய்யப்பட் டுள்ளது. அனைவரையும் இந்த நிகழ் வில் கலந்துகொண்டு மலர்தூவி வணங் குமாறு ஒழுங்கமைப்பாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## புகலிடக் கோரிக்கையாளர்களை அரவணைத்த

# முன்னாள் பிரதமர் பிறயன் மர்லோனியின் இறுதிச் சடங்குகள் அரச மரியாதையுடன்

**ஒன்ராரியோ, மார்ச்02**

பெப்ரவரி 29ஆம் திகதி காலமான முன்னாள் பிரதமர் பிறயன் மர்லோனி யின் பூதவுடலுக்கு அரச மரியாதையுடன் இறுதிச் சடங்குகள் நடைபெறும் எனப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித் துள்ளார்.

சுகவீனமுற்றிருந்த கனடாவின் 18 ஆவது பிரதமரான பிறயன் மர்லோனி தனது 84ஆவது வயதில் புளோரிடா வைத்தியசாலையில் காலமானார்.

இதனையொட்டி, கனேடிய நாடா ளுமன்ற அமர்வுகளும் நேற்று மார்ச் முதலாம் திகதி நிறுத்தப்பட்டமையுடன், நாடாளுமன்றத்தில் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட் டுள்ளது.

1984ஆம் ஆண்டு முதல் 1993ஆம் ஆண்டு வரை சுமார் 9 வருடங்களாக கன்சர்வேட்டிவ் கட்சியின் சார்பில் பிற யன் மர்லோனி பிரதமராகப் பதவி வகித் திருந்தார்.



மர்லோனிக்கு அஞ்சலி செலுத்திய கனேடிய பூர்வீகக் குடிகளின் நலன்பேண் அமைச்சர் கெரி ஆனந்தசங்கரி, 1987ஆம் ஆண்டில் முதன்முறையாக ஒரு மாணவராக மர்லோனியை சந் தித்தமையை நினைவு கூர்ந்தமை யுடன், புகலிடம் கோரி வந்த தமிழர்களை ஏற்றுக்கொள்வதற்காக 'அகதிகளை திருப்பி அனுப்பும் பழக்கம் நமக்கு இல்லை' என்ற கூற்றினை மேற்கோள் காட்டி, அவரது கொள்கைகள் கனடா வின் புகலிடக் கொள்கையையே மாற்றி யமைத்துள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஒன்ராரிய மாநிலங் களவை உறுப்பினரும், இணைப் போக்குவரத்து அமைச்சருமான விஜய் தணிகாசலம், 1986ஆம் ஆண்டில் கப்பலில் புகலிடம் கோரி கனடா ஈழத் தமிழர்களுக்கு, அன்றைய கனேடிய ஊடகங்களும், பொது மக்களும் எதிர்ப்பு தெரிவித்த போதிலும், மர்லோ னியின் தலைமைத்துவத்தை தமிழ் மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள் எனத் தெரிவித்துள்ளார்.



# மின் கட்டணக் கழிவுத் திட்டத்தில் ஒன்ராரியோவில் பலருக்கும் சலுகை

**ஒன்ராரியோ, மார்ச்02**

மின்சாரக் கட்டணக் கழிவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒன்ராரியோவில் வசிப்பவர்கள் பலர் இம்முறை பயன்பெறுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒன்ராரியோ மின்சார கட்டணக் கழிவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வருமானத் தகுதியை அதிகரிப்பதாக 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் மாநில அரசாங்கம் அறிவித்திருந்தது. இந்த மாற்றம் மார்ச் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வருகின்றது.

ஐந்து பேருக்கு மேற்பட்ட குடும்பம் அல்லது வரி அறவிடலின் பின்னர் குடும்பத்தின் மொத்த வருமானம் 71,000 டொலர்களாக காணப்படும் குடும்பங்கள் இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் தகுதி பெறுகின்றன.

இதற்கு முன்னர் இந்த தொகை 52,000 டொலர்களாக இருந்தது.

எமது அரசாங்கமானது மக்களின் செலவுகளை குறைப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கின்றது என்பதற்கான உதாரணமாக இந்த நிகழ்ச்சி இருப்பதாக ஒன்ராரியோ மாநில சிறுவர்கள், சமுதாய மற்றும் சமூக சேவைகள் அமைச்சர் மைக்கல் பர்சா தெரிவித்தார்.



**செய்தியாளர்களுக்கு...**

**(C1 ஆம் பகத்த் தொடர்ச்சி)**

லிபரல் அரசாங்கம் பரவலாக்குகின்றது.

2027ஆம் ஆண்டு வரை உள்ளூர் ஊடகவியல் நிகழ்ச்சியை தொடர்வதற்கு 58.8 மில்லியன் டொலர்களை செலவிடவுள்ளதாக மரபுசார் அமைச்சர் பஸ்கல் செனட்-ஒங்கே தெரிவித்துள்ளார்.

செய்தி நிறுவனங்களுக்கு உள்ளூர் அறிக்கையாளர்களை ஆட்சேர்ப்பதற்கு நிதி வழங்கும் இந்த நிகழ்ச்சி 2019ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

பழங்குடியினர், உத்தியோகப்பூர்வ மொழி சிறுபான்மையினர் மற்றும் சமூகங்கள் உட்பட பின்தங்கிய சமூகங்களில் செய்தித் தகவல்களை அதன் அறிக்கையாளர்கள் வழங்குவதாக அரசாங்கம் தெரிவித்தது.

ஊடகவியல் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு இலாபநோக்கற்ற நிறுவனங்களால் இந்த நிதி நிர்வகிக்கப்படுகின்றது.



# ரஷ்ய வைரங்கள் கனடாவிற்குள் மறைமுக இறக்குமதிக்குத் தடை

**ஒன்ராரியோ, மார்ச் 02**

ஜி7 நாடுகளுடன் ஒருங்கிணைந்த நடவடிக்கையில் 1 கெரட் மற்றும் அதற்கு மேற்பட்ட எடையுள்ள ரஷ்ய வைரங்களை மறைமுகமாக இறக்குமதி செய்வதற்கான கட்டுப்பாடுகளை விதிப்பதாக மார்ச் முதலாம் திகதி கனடா அறிவித்தது.

இந்தப் புதிய கட்டுப்பாடு, கடந்த டிசம்பரில் அறிவிக்கப்பட்ட ரஷ்ய வைரங்கள் மீதான தடைக்கு மேலதிகமானதாக இருக்கின்றது.

கனேடியர்கள் வாங்கும் வைரமானது ரஷ்யாவின் சட்டவிரோத யுத்தத்திற்கு ஆதரவளிக்காதிருப்பதனை உறுதி செய்வதே தடை விதிக்கப்படுவதற்கான நோக்கம் என கனேடிய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.



# மொன்ரியல் புறநகர்ப் பகுதிகளில் தட்டம்மை பரவுவதாக எச்சரிக்கை

கியூபெக்,மார்ச் 02

விரைவில் தொற்றக்கூடிய தட்டம்மை நோய் மொன்ரியல் புறநகர்ப் பகுதிகளில் பரவி வருவதாக கியூபெக் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பெப்ரவரி 27ஆம் திகதி பதிவான நோய்த்தொற்று சம்பவத்தின் மூலம் வெளிநாட்டில் இருந்து இது கொண்டுவரப்பட்டதல்ல எனப் பொது சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனால் சமூகப் பரவல் இருப்பதாக தாம் அஞ்சுவதாக சுகாதாரப் பிரிவு எச்சரித்துள்ளது.

கடைசியாக தொற்று ஏற்பட்டவருடன் தொடர்பு கொண்டவர்களை தேடிப் பரிசோதனை செய்து வருவதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.





# சைக்கிளோட்டிகள் விபத்தில் சிக்குவதைத் தடுக்க வேண்டும்

## டொரன்டோ நகர மேயர் ஒலிவியா சோவ் வலியுறுத்து

ஒன்ராரியோ, மார்ச் 02

சைக்கிளோட்டிகள் விபத்தில் சிக்குவதனைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என டொரன்டோ நகர மேயர் ஒலிவியா சோவ் தெரிவித்துள்ளார்.

ஸ்கார்பரோவில் அண்மையில் சைக்கிளோட்டி ஒருவர் விபத்தில் சிக்கி உயிரிழந்தமை தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே, மேயர் சோவ் இதனைத் தெரிவித்தார்.

டொரன்டோ நகரில் சைக்கிளோட்டிகளுக்கா அல்லது மோட்டார் வாகனங்களைச் செலுத்துபவர்களுக்கா முன்னுரிமை வழங்க வேண்டும் என்பது தொடர்பில் நீண்ட காலமாக விவாதம் இடம்பெற்று வருவதாக மேயர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, டொரன்டோவின் சைக்கிள் வலையமைப்புக்காக டொரன்டோ நகர சபையானது இவ்வருடம் 30 மில்லியன் டொலர்களை செலவிடவுள்ளதாக பிரதி மேயர் ஜெனிப்பர் மெக்கல்வி குறிப்பிட்டார்.





# டேவிட் புளோரிடா ஆய்வுகூடம் அடுத்த ஆண்டு மார்ச் மூடுவிழா!

ஒன்ராரியோ, மார்ச்02

ஒட்டாவாவின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள விண்வெளி ஆராய்ச்சி நிலையம் மூடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

1972ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட டேவிட் புளோரிடா ஆய்வுகூடம் 2025ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மூடப்படவுள்ளதாக கனடாவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

விண்வெளி கூடத்தின் நிர்மாணம் மற்றும் பொருத்துதலில் இந்த ஆய்வுகூடம் ஈடுபட்டு வந்தது.

ரொக்கெட் ஏவுவதற்கான வசதிகளைக் கொண்ட ஒருசில ஆய்வுகூடங்களில் ஒன்றாக இந்த ஆய்வுகூடம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கியூபெக்கின் மதச்சார்பின்மைச் சட்டத்தால் சிறுபான்மை குழுக்கள் பாதிக்கப்படும் நிலை

கியூபெக், மார்ச் 02

கியூபெக் மாநிலத்தின் மதச்சார் பின்மைச் சட்டமான, "சட்டமூலம் 21" அரசமைப்புக்கு உட்பட்டது என்கிற கியூபெக் நீதிமன்றத்தின் மேன் முறையீட்டுத் தீர்ப்பினால் சிறுபான்மை குழுக்கள் பாதிக்கப்படும் என தெரி விக்கப்படுகின்றது.

ஆசிரியர்கள், நீதிபதிகள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் உட்பட அதி காரப் பதவிகளில் இருக்கும் பொதுத் துறை ஊழியர்கள் பணியிடத்தில் மதச் சின்னங்களை அணிவதைத் தடை செய்யும் சட்டத்தை ஏற்று மாகாணத் தின் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒருமனதாகத் தீர்ப்பளித்தது.

மொன்றியலின் முஸ்லிம் மற்றும் சீக்கிய சமூகங்கள் இந்த முடிவு கியூ




பெக்கில் மேலும் பாகுபாட்டுக்கு வழி வகுக்கும் எனத் தெரிவித்துள்ளன.

இந்த சட்டமூலத்தில் நீதிபதிகள், ஆசிரியர்கள் மற்றும் பொலிஸார் ஆகியோரிகள் பதவிகள் தனித்தனியாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.